பட்டிருக்கிறது. போடியிலிருந்து உசிலம்பட்டிக்கு வருவது என்று சொன்னால், 75 கிலோமீட்டர் தூரம் வரவேண்டியிருக்கிறது. நான் வழக்கறிஞராக 1963-லே சென்றதிலிருந்து இன்று வரையில் அந்த மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே பரிவோடு உடனடியாக போடித் தொகுதியிலே ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவ நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-45)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்விக்கு தெளிவாக விடையளித்திருக்கிறேன். உசிலம்பட்டியிலே இருக்கிற நீதிமன்றத்திற்கு எந்த ஆபத்தும் இல்லை. அது தக்க வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது அங்கே இருக்கும். அதை அடுத்துதான் புதியதாக போடியில் ஒரு நீதிமன்றம் வரும் என்ற இனிய செய்தியை நூறாவது நாளுக்காக சொன்னேனே தவிர உசிலம்பட்டியிலே இருக்கிற நீதிமன்றத்தை எடுத்து போடியிலே கொடுக்கவில்லை என்பதை எனது பாசத்திற்குரிய இனிய நண்பர் உறுப்பினர் மாண்புமிகு ஆண்டித்தேவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 120 திரு. ம. சின்னசாமி, திருமதி கே. மரியமுல் ஆசியா, டாக்டர் செல்வி ஜி. ஆர். மாலா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

120—

திருச்சி மற்றும் கரூர் வட்டங்களைப் பிரித்தல்.

* 219 திரு. ம. சின்னசாமி:

திருமதி கே. மரியமுல் ஆசியா:

டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1991 அக்டோபர் 1

திருச்சி மாவட்டத்தில், திருச்சி, கரூர் ஆகிய வருவாய் வட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே பெரிய வட்டமாக இருக்கிற கரூர் வட்டத்தையும் திருச்சி வட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன். நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அது எப்போது அமலுக்கு வரும் என்று கேட்க விரும்புவதோடு அந்த வட்டங்களுக்கு தலைமை இடமாக எந்தெந்த இடத்தை கொடுத்து பிரிக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஸ்ரீரங்கத்தை தலைநகராகவும், கரூரை இரண்டாகப் பிரித்து அரவக்குறிச்சியை தலைநகரமாகவும் கொண்டு வட்டங்களை அமைக்கலாம் என்று அதுவும் மாவட்டங்களை பிரிக்கின்றபோது இதையும் சேர்த்து ஒன்றாகச் செய்யலாம் என்று அரசு எண்ணியிருக்கிறது.

திருமதி கே. மரியம்முல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்து அரவக்குறிச்சியை தலைமை இடமாக வைத்து பிரிப்பதற்கு அரசு ஆவன செய்திருக்கிறது என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 249 சின்னங்கள் இருந்தபோதிலும்— அரவக்குறிச்சியை தலைமை இடமாகக் கொண்ட வருவாய் வட்டம் அமைக்க வேண்டும் என்ற நீண்ட நாள் மக்கள் கோரிக்கையை வரக்கூடிய ஆட்சியிலாவது நிறைவேற்ற

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1991 அக்டோபர் 1

றலாம் என்ற நம்பிக்கையோடு நினைத்தால், 249 சின்னங்களிலே் இரட்டை இலையைத் தேடிக் கண்டு பிடித்து மாண்புமிகு புரட்சித் தலைவியின் கரங்களை வலுப்படுத்த வேண்டும் என்று வாக்களித்து இருப்பதால், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அது எப்போது செயல்படும் என்பதை அறிவிப்பாரா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற நிதி ஆண்டில் திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க ஆய்வில் இருக்கிறது. அப்போது இதுவும் செய்யப்படும்.

டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சீர்திருத்த சட்டத்தை முனைப்போடு செயல்படுத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு திருச்சி வட்டத்தை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவித்திருப்பதற்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பிரிக்கும்போது ஒவ்வொரு பிரிவிலும் எந்தெந்தப் பகுதிகள் சேர்க்கப்படும் என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஸ்ரீரங்கத்தை தலைமையிடமாகவும், கரூரை இரண்டாகப் பிரித்து அரவக்குறிச்சியை தலைமையிடமாகவும் கொண்டு வருவாய் வட்டம் அமைக்கப்படும். எந்தெந்த வருவாய் கிராமங்கள் எந்தெந்த வட்டத்தில் சேரும் என்பது ஆய்வில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS